# எங்களைச் சந்தித்தால்.....?!?!?!



**தொகுத்தவர்:**

இந்துமதத் தந்தை, தலைவர், குருதேவர், ஞானாச்சாரியார், அரசயோகி, அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரூர், குவலய குருபீடம்.

## கொள்கை விளக்க முழக்கங்கள்

**எங்களைச் சந்தித்தால்:**

'இந்து மறுமலர்ச்சி இயக்கம்' என்பது உலக மதங்கள் அனைத்துக்கும் தாயாக உள்ள இந்துமதத்தின் அருமை பெருமைகளை விளக்கியுரைப்பதன் மூலம் உலக மதங்களின் பிணைப்புக்கும் இணைப்புக்கும் வழி செய்கிறது. எனவே, இந்த 'எங்களைச் சந்தித்தால்' என்ற தலைப்பில் வெளியிட்டுள்ள முழக்கங்களை! உலக ஆன்ம நேய ஒருமைப்பாட்டுக்குரிய மத விழிச்சி! எழிச்சி! செழிச்சி! நிலைகளை உருவாக்கிடும்.

> ***உலகத்தில் வேறு யாரிடமும் இல்லாத, கிடைக்காத, மனிதகுலத்தைக் காக்கக்கூடிய மிக அரிய பெரிய உண்மைகளை எங்கள் குருதேவரின் எழுத்துக்களில் நீங்கள் பெற்றிடலாம்***

இப்பேருண்மைகளை உணர்ந்து சித்தர் நெறியினரும் மற்றவர்களும் இம் முழக்கங்களை அனைத்து நிகழ்ச்சிகளிலும் இடம்பெறச் செய்ய வேண்டும். அது தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு, சமய வாழ்வு ஆகிய ஐந்து வகை வாழ்வுகளையும் சிறப்பிக்கும், செயல்நிலைப் படுத்தும்.

"மதமே மனித இனத்துக்கு விருந்தும் மருந்துமாகும்"
"மதமே கலைகளுக்கும் அறிவியலுக்கும் தாய்"
"மதமே மனித நலன் காக்கும் அரண்! அருட்சேனை!
"மதவழிச் செயல்பாடுகளே மனித நலத்துக்கு வழி... விழி!!!



இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் பாரம்பரிய இரண்டாவது தலைவர், காக்கா வழியன் பண்ணையாடி, உலகமகா மார்க்சீயச் சிந்தனையாளர், உலகப் பொதுவுடமை இயக்கச் சிற்பி, இந்தியப் பொதுவுடமைச் சித்தாந்தத் தந்தை, சித்தர் காகபுசுண்டர் ம.பழனிச்சாமிப்பிள்ளை அவர்கள் தொகுத்த கொள்கை விளக்க முழக்க 'வசனக்கவிதைகள்', 'வசனங்கள்', 'உரைநடைக் கொத்து' .... இன்றைய இ.ம.இ.தலைவர், குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரூர் தொகுத்தளிக்கிறார்.

இந்துமதத் தந்தை
30/11/1985

1. இந்துமதம் பற்றிய பேருண்மைகளைப் புரிந்து கொள்ளலாம்.
2. இந்துமதத்தில் உள்ள ஆபாசங்கள், ஏமாற்றுகள், மூடநம்பிக்கைகள், சுரண்டல்கள், காட்டுமிராண்டித் தனங்கள், பழக்க வழக்கங்கள், ... முதலிய அனைத்தையும் அகற்றிட இந்துமதத்தைத் தோற்றுவித்த வாரிசு வந்திருக்கிறார். இந்துமதத் தந்தையாகப் பொறுப்பேற்றிருக்கும் 12வது பதினெண் சித்தர் பீடாதிபதியே மேற்கண்ட தவறுகளையும், குறைகளையும் நீக்க வந்திருக்கிறார். வாரீர்! வாரீர்! வாரீர்!
3. இம்மண்ணுலகில் தோன்றியுள்ள அனைத்து மதங்களுக்கும் மூலமதமாக, முதல் மதமாக தாய்மதமாக இருக்கின்ற தமிழர்களின் மெய்யான இந்துமதத்துக்கு மதவெறி கிடையாது. மதப்பொறுமை கிடையாது, கிடையாது. எனவேதான், இந்து மதமறுமலர்ச்சியின் மூலம்தான் உலக மதங்களை இணைக்க முடியும். பிணைக்க முடியும்.



4. இந்துமதத்தின் பெயரால் இசுலாம், கிறித்துவம், புத்தம், சமணம் போன்ற மதங்களைத் தாக்குவது தவிர்க்கப் படும்.
5. மதச்சண்டைகளை வளர்க்கும் ஆரிய வேத மதத்தின் முகத்திரை கிழிக்கப்படும்.
6. சாதிவெறிகளைத் தூண்டிவிடும் ஆரிய வேதமதத்தின் சதித் திட்டங்கள், சூழ்ச்சிச் செயல்கள் அம்பலமாக்கப் படும்.
7. இந்துமதம்தான் தமிழருடையது! ஹிந்துமதம் ஆரியருடையது. இப்பேருண்மைகளைப் புரிய வாரீர்!
8. மெய்யான இந்துமதப்படி தமிழினத் தந்தை பெரியார் ஈ.வெ.ரா. 64வது சொல்லடி நாயனாராக அறிவிக்கப்பட்டிருக்கிறார். விவரங்களை அறிய வாரீர்!
9. மெய்யான இந்துமதப் படி மேலைய நாட்டு கம்யூனிசச் சித்தாந்தத் தந்தை கார்ல்மார்க்சு நவநாத சித்தராக அறிவிக்கப் பட்டிருக்கின்றார்.
10. 'காலடி ஆதிசங்கராச்சாரியார் ஒரு தமிழரே' என்ற பேருண்மையைத் தெரிந்து கொள்ள வாருங்கள்.



11. இளமுறியாக் கண்டத்தில் கி.மு. 43,71,101இல் உருவாக்கப்பட்ட இந்து மதத்தால்தான் தமிழினத்திற்கு தன்மானத்தையும், தன்னம்பிக்கை யையும், சுய மரியாதையையும், பெருமையையும் மீட்டுத் தரமுடியும்.
12. தமிழன் தன்னைப் பாதுகாக்கக் கூடிய இந்துமதத்தைத் துறந்ததாலும், மறந்ததாலும்தான் உலகெங்கும் பழியையும், இழிவையும் அடைகின்றான். எனவே, தமிழன் தன்னுடைய இந்துமதத்தைப் புரிந்து ஏற்றுக் கொள்வதின் மூலம்தான் மீண்டும் தமிழினம் ஒற்றுமையும், வலிவும், ஆட்சியும் உருவாக்க முடியும்.
13. இந்துமத மறுமலர்ச்சி மூலம்தான் தமிழனுக்கு மொழி உணர்வையும் இன உணர்வையும் ஊட்ட முடியும்! ஊட்டமுடியும்! ஊட்டமுடியும்!
14. பிறமண்ணினரான பிருமணர்கள் எனப்படும் வட ஆரியர்கள் தமிழ் மொழியையும், தமிழர்க்குரிய வரலாற்றையும், தமிழரின் மெய்யான இந்துமதத்தையும் எப்படி யெல்லாம் சிதைத்துச் சீரழித்துள்ளார்கள்

என்பதையும்; மறைத்துத் திரித்துள்ளார்கள் என்ற விவரங்களையும் தெரிந்து கொள்ளுங்கள்.

15. குவலய குருபீடம் இந்துமதத்தின் குறைகளையும், கறைகளையும் முறையாக நிறையாக விளக்கிட முன்வந்துள்ளார்.
16. ஞானச்சாரியார், இந்து மறுமலர்ச்சி இயக்கத்திற்கு பகுத்தறிவுப் பகலவன் பெரியார் ஈ.வெ.ரா.வை கௌரவத் தலைவராக அறிவித்துள்ள புரட்சிக் கருத்துக்களை கேட்க வாருங்கள்.
17. பன்னிரு திருமுறைகள், சாத்திறங்கள் தோன்றிய வரலாற்றை தெரிந்து கொள்ள வாருங்கள்.
18. தமிழினமே! உனக்கு ஏற்பட்டிருக்கும் பாதிப்புக்களைப் போக்கிக் கொள்ள சித்தர்களுடைய இந்துமதம்தான் வழிகாட்டியாக, வழித்துணையாக, வழிப்பயனாக இருக்க முடியும்! இப்பேருண்மைகளைப் புரிந்து கொள்ளுங்கள்.
19. தமிழகத்திலுள்ள அனைத்து வகையான இயக்கங்களும் தமிழர்களை ஒற்றுமைப் படுத்துவதில் தோல்வி கண்டு விட்டன. தமிழர்களின் உரிமைகளையும், பெருமைகளையும் மீட்டுத் தருவதில் தோற்றுப் போயின. எனவே, தமிழர்களே விழிச்சி பெறுங்கள். எழுச்சி பெறுங்கள்! உங்களுக்கு வழிகாட்ட வந்திருக்கும் தமிழின குலகுரு, தமிழினத் தலைவர், தமிழ்மொழித் தலைவர், தமிழ்ப் பண்பாட்டுத் தலைவர், குவலய குருபீடம், ஞானச்சாரியாரை சந்திக்க வாருங்கள். அருளுலக, பொருளுலகச் சிக்கல்களைப் போக்கிக் கொள்ளுங்கள்.
20. கடவுள் மனிதனாக வருவான் என்று காத்திருக்கத் தேவையில்லை. மனிதர்களையே கடவுளாக மாற்றும் சித்தர்களின் இந்துமதத்தினைத் தெரிந்து கொள்ள வாருங்கள். செயல்பட வாருங்கள்.



21. வடலூர் அருட்பெருஞ்சோதி இராமலிங்க அடிகளாரின் மெய்யான வரலாற்றை அறிந்து கொள்ள வாருங்கள்.
22. வட ஆரியர்களின் பொய்யான ஹிந்துமதத்திலிருந்து விடுபட வாருங்கள்.
23. நாயன்மார்கள், ஆழ்வார்கள், மௌன குருக்கள், மௌன சாமிகள், தாயுமானவ சாமிகள், தாயுமானவ அடிகள், பட்டினத்தார்கள், அருணகிரியார், மற்ற பத்தியாளர்கள், சத்தியாளர்கள், சித்தியாளர்கள், முத்தியாளர்கள் ... முதலியவர்களின் மெய்யான வரலாற்றைத் தெரிந்து கொள்ள வாருங்கள்.
24. தேவகுமாரன் ஏசா - ஈசா பற்றிய பேருண்மைகளை அறிந்து கொள்ள வாருங்கள்.
25. தமிழரின் மதமான இந்துமதம் ஈன்றெடுத்தவையே உலக மதங்கள் என்ற பேருண்மையை உணர்த்திக் கொள்ள வாருங்கள்.
26. காணுகின்ற கோயில்களின் மெய்யான தத்துவ விளக்கங்களைக் காண வாருங்கள்.
27. ‘சித்துக்களை அத்தவர்களே சித்தர்கள்’ என்ற தத்துவத்தை உணர வாருங்கள்.
28. இந்துமதம் அகவாழ்க்கைக்கும், புறவாழ்க்கைக்கும் எப்படி யெல்லாம் பயன்படும் என்பதைப் புரிந்து கொள்ள வாருங்கள்.
29. அருளை அநுபவப் பொருளாகப் பெறும் வழிமுறைகளை அறிந்து கொள்ள வாருங்கள்.

30. மனிதர்கள் கடவுள்களாக மாறியதே மெய்யான இந்துமதம் என்ற பேருண்மைகளைப் புரிந்து கொள்ளுங்கள்.
31. போலியான மதமறுப்பும், வெறுப்பும், காலியான கூலி வாழ்க்கையைத்தான் தரும் என்ற பேருண்மைகளை அறிந்து கொள்ளுங்கள்! வாருங்கள்!
32. ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இருக்கின்ற தத்துவப் பசியைத் தீர்த்துக் கொள்ள வாருங்கள்; ஆன்மீகத் தாகத்தைத் தணித்துக் கொள்ள வாருங்கள்.
33. பழம்பிறப்புக்களையும், மறுபிறப்புக்களையும் பற்றிய பேருண்மைகளைப் புரிந்து கொள்ள வாருங்கள்.
34. இப் பிறப்பினை அடக்கி ஆள்கின்ற நாள், கோள், மீன், இராசிகளைப் பற்றித் தெரிந்து கொள்ள வாருங்கள்.
35. தமிழினத்துக்குரிய ஆயகலைகள் 64ஐயும் அருட்கலைகள் 48, ஏனைய கலைகளான கடவுட் கலைகளையும், தெய்வீகக் கலைகளையும், பேய்க் கலைகளையும், தேய்கலைகளையும் அறிந்து கொள்ள வாருங்கள்.



36. தமிழன் கண்டுபிடித்த மனையடி சாத்திறங்கள், அங்கவியல், வரியியல் சாத்திறங்கள் அறிந்து கொள்ள வாருங்கள்.
37. உருவ வழிபாட்டைக் கூறும் மெய்யான இந்துமதத்தையும், அருவ வழிபாட்டைக் கூறும் பொய்யான ஹிந்துமதத்தையும் அறிந்து கொள்ள வாருங்கள்.
38. தமிழர்களை வீழ்த்தித் தாழ்த்தி வைத்திருக்கும் பொய்யான ஹிந்துமதத்திலிருந்து தமிழர்களை விடுவிக்க மெய்யான இந்துமதத்தை மறுமலர்ச்சி அடையச் செய்ய வாருங்கள்.
39. உங்கள் ஒவ்வொருவரையும், உண்மையான அருளாளராக உயர்த்துவதற்குரிய வழி வகைகளைச் சொல்ல வந்திருக்கும் ஞாஞச்சாரியாரைச் சந்திக்க வாருங்கள்.
40. தமிழர்களே! “கடைவிரித்தோம்! கொள்வாரில்லை” என்ற நிலை இராமலிங்க அடிகளாருக்கு ஏற்பட்டது போல் இனியும் ஏற்பட வேண்டாம்! சிந்தியுங்கள். செயல்பட வாருங்கள்!
41. இந்துமதத் தந்தை குருதேவரின் அருளை மருந்தாகவும், விருந்தாகவும் பெற்றுக் கொள்ள வாருங்கள்.
42. கண்மூடித்தனமான பிருமண எதிர்ப்பினுல் தமிழினத்திற்கு நன்மையே இல்லை! இல்லை! இல்லை!
43. காட்டுமிராண்டித் தனமான மதவிமர்சனத்தால், தமிழினத்திற்கு நன்மையே இல்லை! இல்லை! இல்லை!
44. நாத்திக வாதத்தால் தமிழினத்திற்கு மறுவாழ்வு இல்லை! இல்லை! இல்லை!
45. போலியான தமிழ்த் தொண்டினுல், போராட்டங்களால் தமிழினத்திற்கு நன்மையே இல்லை! இல்லை! இல்லை!
46. இந்துமத இலக்கியங்களை இழித்தும், பழித்தும் பேசுவதால் தமிழினத்திற்கு நன்மையே இல்லை! இல்லை! இல்லை!
47. தமிழின உரிமைகளும், பெருமைகளும் வயிற்றுப் பிழைப்புக்காக நடத்துவதால் தமிழகத்திலுள்ள கட்சிகளாலும், இயக்கங்களாலும், தமிழகத்திற்கு நன்மையே இல்லை! இல்லை! இல்லை!
48. நாத்திக வெறியோடு மதத் தலைவர்களையும், மதவாதிகளையும் புண்படுத்திப் பேசுவதால்; தமிழினத்திற்கு நன்மையே இல்லை! இல்லை! இல்லை!

49. மதக் கல்வியையும், மத வாழ்வையும் மடமையாக எதிர்ப்பதால், தமிழினத்திற்கு நன்மையே இல்லை! இல்லை! இல்லை!
50. தமிழர்களுக்கு அன்னியத் தலைமையும், அன்னிய வழிகாட்டலும், அன்னிய உறவும் இருக்கின்ற வரையில் தமிழனுக்கு சுய மரியாதை முளைக்காது, தன்மானம் கிடைக்காது, தன்னுரிமை பிழைக்காது.
51. தமிழ் மொழியைத் தெரிந்தவனும், தமிழ்மொழியைக் கற்றவனும்தான் இந்துமதத்தைச் செழிக்கச் செய்ய முடியும். அப்படி இந்துமதம் செழித்தால்தான் தமிழரின் உரிமையும், பெருமையும் செழுச்சி, எழுச்சி, உயர்ச்சி, மலர்ச்சி பெற முடியும்.
52. தமிழர்களே உங்களை உய்ய வைக்கும் மெய்யான முயற்சிகள் துவங்கி விட்டன என்பதை உணர்ந்து மெய்யான இந்துமதத்தை உணர வாருங்கள். கருத்து விளக்கம் பெற வாருங்கள்.
53. தமிழர்களே நம்மிடையில் ஒற்றுமை உருவாகும் வழிகளை உணரலாம். வாருங்கள்.



54. தமிழர்களே நமது உண்மையான வரலாறு என்ன? இலக்கியங்கள் யாவை என்பதைத் தெரிந்து கொள்ளலாம். வாருங்கள்.
55. தமிழர்களே நமக்கு குருபாரம்பரியம் எது? நமது குருதேவர் யார்? நமது ஆச்சாரியார் யார்? நமது தலைவர் யார்? நமது வழிகாட்டி யார்? நமது வழித்துணை யார்? ... என்பதைப் புரிந்து கொள்ள வாருங்கள்.
56. தமிழர்களே நமது வீழ்ச்சிக்கும், தாழ்ச்சிக்கும், பிரிவுற்றுக் கிடக்கும் மாட்சிச் சிதைவுக்கும், அடிமையுணர்வுக்கும், வெறியுணர்வுக்கும் காரணமாயிருக்கும் சூழ்ச்சிகளைப் புரிந்து கொள்ள வாருங்கள்.
57. தமிழர்களே! நமது மொழி, நமது இனம், நமது நாடு எனும் முக்கோணக் கோட்டையைப் பழுது பார்க்கும் பணியில் பங்கு பெற வாருங்கள்.
58. தமிழர்களே! தன்னிகரில்லா ஒற்றுமையும், பாசப் பிணைப்பும், பற்றுமிகு உறவும், கிளர்ச்சிமிகு உணர்வும், வளர்ச்சிமிகு உரிமையும் பெற்றுத் திகழக் கூடிய வருங்காலத்தை உருவாக்கும் வழிவகைகளைக் கற்றுக் கொள்ள வாருங்கள்.
59. குடும்ப தெய்வம், ஊர் தெய்வம், குல தெய்வம், உலக தெய்வம்... என்ற இந்துமத அடிப்படைகளைத் தெளிவாகப் புரிய வாருங்கள்! வாருங்கள்.
60. அன்னியர்களின் சூழ்ச்சிகள் பின்னிய வலையில் பிடிக்கப்பட்ட மீன்களாக நமது தலைவர்கள், கலைஞர்கள், பெரியவர்கள் பலியாவதை (விற்பனையாவதை) தடுக்கக் கற்றிட வாருங்கள்.
61. கோயில்களும், ஆலயங்களும் இருண்டதேன்! கோலாகல விழாக்கள் கொள்கை இழந்ததேன்? என்பதைப் புரிந்திட வாருங்கள்.
62. ஒவ்வொருவரும் அருளுலக ஞானம் பெற்றுத் திகழ வழி தெரிந்திட வாருங்கள்.
63. மதம் மனித வாழ்வுக்குப் பயன்படாமல் கெட்டுப் போகுமாறு யார் செய்தது? எப்போது செய்தார்கள்! எப்படிச் செய்தார்கள்? .... என்ற பேருண்மைகளைத் தெரிந்து கொள்ளலாம் வாருங்கள்!
64. மதத்தின் போதனைகளும், சாதனைகளும் முழுக்க முழுக்கப் பகுத்தறிவுப் போக்குடையவையே! விஞ்ஞான அடிப்படையைப் பெற்றவையே என்ற பேருண்மைகளைச் சான்றோடும், ஊன்றோடும் தெரிந்து கொள்ளலாம் வாருங்கள்.

65. மதமே மனித வாழ்வை ஒழுங்கும், கட்டுப்பாடும், சுறுசுறுப்பும், விறுவிறுப்பும், செயல்திட்பமும், இனிமையும், அன்பும், பற்றுப்பாசமும், ஒற்றுமையும்... உடையதாக விளங்கச் செய்து வளர்க்கிறது என்ற பேருண்மைகளைத் தெரிந்து கொள்ளலாம்.
66. அண்டபேரண்டங்களையும் பிண்டங்களையும் விண்டுரைத்து வாழ்வியலுக்குப் பொருள் கூறும் மதத்தின் அருமைபெருமைகளையும், அரிய பயன்களையும் ஆராய்ந்து அறிந்து புரிந்து தெரிந்து உணர்ந்து ஏற்றிடலாம் வாருங்கள்! வாருங்கள்!

*கருக்கள், குருக்கள், தருக்கள், திருக்கள் எனப்படுபவர்களின் வாக்குகள், வாக்கியங்கள், வாசகங்கள், பாரம்பரியங்கள்... எனப்படும் நால்வகை இலக்கியங்களிலிருந்து எடுக்கப்பட்ட கருத்து விளக்கங்கள்.*

**மூல நகல் 30-11-1985இல் எழுதப் பட்ட கையெழுத்துப் பிறதியாக இருந்தது.**

---

# அருளாட்சி அமைப்புப் பணிக் குருவாக்கியங்கள்

அரச பாரம்பரியம், இலக்கிய பாரம்பரியம், குருவாசகம், குருபாரம்பரியம் எனும் நான்கிலும் பல குருவாக்கியங்கள் எழுதப் படுகின்றன. குருவாக்கியங்கள் பல தலைப்புக்களில் தனித்தனித் தொகுதிகளாகத் தொகுக்கப் பட்டிருக்கின்றன.

(i) அருளாட்சி அமைப்புப் பணிக் குருவாக்கியங்கள்
(ii) பொருளாட்சி புரட்சி மலர்ச்சிக் கட்டுக்கோப்புப் பணிக் குருவாக்கியங்கள்
(iii) தனிமனித வாழ்வு மறுமலர்ச்சிக் குருவாக்கியங்கள்
(iv) குடும்ப வாழ்வு மறுமலர்ச்சிக் குருவாக்கியங்கள்
(v) சமுதாயப் புத்தமைப்புக் குருவாக்கியங்கள்
(vi) சமய விழிச்சிக் குருவாக்கியங்கள்
(vii) சமய எழிச்சிக் குருவாக்கியங்கள்
(viii) சமயச் செழிச்சிக் குருவாக்கியங்கள்
(ix) இலக்கிய வளவளர்ச்சிக் குருவாக்கியங்கள்
(x) அரசியல் வலிவு வளர்ச்சிக் குருவாக்கியங்கள்
(xi) கலையுலக மறுமலர்ச்சி வளர்ச்சிக் குருவாக்கியங்கள்
(xii) அன்னிய ஒழிப்புப் பண்பாட்டுப் பொலிவு மிளிர்ச்சிக் குருவாக்கியங்கள்



......
என்று சிறப்பாகப் பன்னிரண்டு தொகுதிகள் இருக்கின்றன. இந்தக் குருவாக்கியங்களின் கருத்தோட்டம் கலியுகத்தையே மிகுதியாக சித்தரிக்கின்றது. அதாவது, அன்னியர், வட ஆரியர், பிருமணர், அரசியல் விடுதலை, மொழிப் பெருமை, மொழியுரிமை, மொழியின் வீழ்ச்சி, தாழ்ச்சி, வீழ்ச்சி, எழிச்சி..... பற்றிய விளக்கங்கள்; இன ஒற்றுமை, இனப்பற்று, இன உனர்வு, இன மானம், இன விடுதலை, .... பற்றிய விளக்கங்கள் தமிழிலக்கிய இழப்பு, தமிழிலக்கிய மறுமலர்ச்சி, மெய்யான இந்துமதம், பொய்யான ஹிந்துமதம், உயிரில்லாப் பூசை மறைகளும், முறைகளும், அருளூற்றுக்கள் அடைபட்டன, அடைபட்ட அருளூற்றுக்களை விடுவித்தல், அருளுலக இருள், அருளுலக மோசடிகள், அருளுலகச் சோம்பேறிகள், இந்துமதமே மனிதனை மேம்பாட்டுக்கும் இனிமைக்கும்

***இந்தக் கருத்துக்கள் அனைத்தும் இரகசியங்களே! வெளிப்படையாக எல்லோரிடமும் பேசிடக் கூடாது!***

மருந்து; களப்பிறர், பல்லவர், சோனகர், யவனர், சீனர், புத்தர், மகாவீரர், அமணர், சமணர், நாயன்மார், ஆழ்வார், தேவகுமாரன்.... என்னும் சொற்கள்.... முதலிய கருத்துக் குறிப்புக்கள் இந்தப் பன்னிரண்டு தொகுதிக் குருவாக்கியங்களிலும் மிகுந்துள்ளன. எனவேதான், இவை பத்தாவது, பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதிகளுக்கே உரியவை என்று கருத வேண்டியுள்ளது. கண்டப்பக் கோட்டைச் சித்தர் ஏளனம்பட்டியார்தான் இப்படி பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியை நினைவில் கொண்டு தமக்குக் கிடைத்த குருவாக்கியங்களைப் பன்னிரண்டு தலைப்புக்களில் தனித்தனித் தொகுதிகளாகப் பிரித்துத் தொகுத்தாரோ தெரியவில்லை.

பதினெண்சித்தர் பீடாதிபதிகள் எழுதிடாமல் செவி வழியாகக் [Unwritten Literature, Secret Verses brought to us only by hear-sayings] கூறும் கருத்துச் செறிவுச் சொற்றொடர்களே "குருவாக்கு". இவை குருவாக்குகள் என்று அவ்வப்போது தேவைக்கேற்ப ஏட்டில் எழுதப்பட்ட குருவாக்குகளே காலப் போக்கில் "குருவாக்கியங்கள்" என்ற தலைப்பில் தனி இலக்கியங்களாகத் தொகுக்கப்பட்டன.



கருவாக்குகள் → கருவாக்கியங்கள்
தருவாக்குகள் → தருவாக்கியங்கள்
திருவாக்குகள் → திருவாக்கியங்கள்

அதாவது, 'எழுதாக் கிளவிகள்', 'எழுதிடாமல் வாழவைக்க வேண்டிய இலக்கியங்கள்', 'மறைகளுக்கு ஒப்பான பயனுள்ள எழுதப்படாத இந்துமதக் கருத்துக்கள்' முதலியவைகளை பக்குவம் இல்லாதவர்களும், அருளுலக நாட்டமற்றவர்களும், 'இந்துமதத் துரோகிகளும்', 'இந்துமத விரோதிகளும்', 'வட ஆரியச் சூழ்ச்சிக்காரர்களும்', 'சுரண்டல் காரச் சதிகாரப் பிருமணர்களும்', ... தங்கள் விருப்பப்படி திரித்தும், குறைத்தும், கூட்டியும், மறைத்தும், நிறைத்தும், செருகியும் .... செயல்பட்டு விடக்கூடாது என்பதற்காகத்தான் வாக்குகள் நான்கு வகையும் [நான்வாக்குகள்], வாக்கியங்கள் நான்கு வகையும் [நான்வாக்கியங்கள்] தொடர்ந்து 'எண்டிசைக் காப்புக்களாக', 'இந்துமதத்தின் எண்டிசைக் காவல் சத்திகளாக', 'அருளுலக எண்டிசைப் பீடங்களாக', சித்தர் நெறிக் கருவூலத்தின் எண்டிசைக் காவல் நாயகங்களாக..... இலைமறை காயாக வாழ்ந்து வருகின்றன. இந்த அளவில், குருவாக்கு, குருவாக்கியங்கள் என்ற இலக்கிய வகை பற்றிய விளக்கக் குறிப்பை நிறைவு செய்து ஒரு சில குருவாக்கியங்களை இங்கு குறிப்பிடுகின்றோம் .............. .......

## <u>குருவாக்கியங்கள்</u>

1. தமிழ் நாட்டைச் சுற்றிப் பார்த்தால் தமிழ் மணமோ, தமிழ்ப் பண்பாட்டு வடிவமோ, தமிழ் நாகரீகச் சிறப்போ, தமிழ்க் கலை மிளிர்ச்சியோ.... .... உணரப் படவில்லை. எனவேதான், மொழிப்பற்றோ, இன ஒற்றுமையோ, நாட்டுரிமையுணர்வோ செழிக்க முடியாமல் வாடிய பயிராகவே உள்ளன.

> ***ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் கூறப்பட்ட கருத்துகள் இன்று கூட உண்மையாகவே இருக்கின்றன.***

2. தமிழகத்தின் ஊர்கள் தோறும் குட்டி யவனபுரி, குட்டி சீனபுரி, குட்டிச் சோனகபுரி, குட்டி ஆரியபுரி, .... .... என்று அன்னிய வாழிடங்கள் வளமாகவும், வலிவாகவும் அமைந்திருக்கின்றன. இப்படி இவைகள் அனைத்து செல்வாக்கோடும் அதிகார நிலையில் வாழும் போது இவைகளுக்கிடையில் தமிழினம் எப்படித் தன்மானம், தன்னம்பிக்கை, இனமானம்,

இனப்பற்று, இன ஒற்றுமை, மொழியுரிமை, மொழிப்பற்று, நாட்டுப் பெருமை, நாட்டுரிமை யுணர்வு ... ... முதலியவை எப்படிச் செழிக்க முடியும். கடுமையான கோடையில் தண்ணீர் பாய்ச்சாமல் விடப்பட்ட தோட்டத்துப் பயிர்கள் வாடி வதங்கி விடுவது போல் மேற்படி உணர்வுகள் அனைத்தும் வாடி வதங்கி விட்டனவே.

3. அன்னியர்களின் மேனியழகுக்கும் நாகரீகப் போக்குக்கும் பித்தாகி தமிழினப் பெரியோர் முதல் சிறுஅர் வரை தேன் குடித்த நரி போலவும், கள் குடித்த கடுவான் [ஆண் குரங்கு] போலவும் மயங்கி வெறி கொண்டு செயல்பட்டே இனநலத்தை அன்னியர்க்கு அடகு வைத்திட்டார்கள்.

4. கல்விச் சாலைகளின் பாலாசிரியர்கள், இளம் பாலாசிரியர்கள், ஆசிரியர்கள், புலவர்கள், கவிஞர்கள், பாணர்கள், கூத்தர்கள், பொருநர்கள், நகை வேழம்பர்கள், கலைஞர்கள், காவிதிகள்... ... முதலியோர் அனைவருமே காசுக்காக கண்டவரோடு எல்லாம் கூடிக் குலவும் வேசியை விடக் கேவலமாக அன்னியரின் புகழ் பாடிப் பரிசு பெற்றும், கூலி பெற்றும், தன்மானமோ, தன்னம்பிக்கையோ, இன உணர்வோ, மொழிப்பற்றோ, நாட்டுரிமை நாட்டமோ.... இல்லாத பேடிகளாக அடிமைகளாக மாறிவிட்டார்கள். இவர்களே தமிழின விழிச்சிக்கும், எழிச்சிக்கும், வளவளர்ச்சிக் கிளர்ச்சிக்கும், மறுமலர்ச்சி முயற்சிக்கும் விரோதிகள்! விரோதிகள்! விரோதிகள்! இந்த விரோதிகளை வீழ்த்தி யழித்திடாமல் தமிழின நல்வாழ்வுத் திட்டங்களைச் செயலாக்க முடியாது! முடியாது! முடியாது! முடியவே முடியாது!

> ***இன்றும் அன்னியக் கல்வியையே விரும்பிக் கற்று, அன்னிய நாகரிக பழக்க வழக்கங்களுடன், வாழ வேண்டிய நிலை நீடிக்கிறது.***

5. நிலையில்லா வாழ்வின் ஊழும், விதியும், ஆழமும், ஆழ்ச்சிச் சூழ்ச்சி, ஆவி ஆன்மா ஆருயிர் மாட்சியும் .... உணர்ந்த தத்துவ ஞானிகள் தலைவராக இருக்க வேண்டிய நாட்டு நடப்பில்; அனைத்தையும் விலைக்கு விற்கும் வேசிமனம் கொண்ட கலைஞர்கள் தலைமை தாங்கும் இழிநிலை, பழிநிலை, அழிநிலை, ஒழிநிலை எப்படியோ தலைதூக்கி விட்டது. இந்த அவலநிலை, கேவலநிலையை வலையாகப் பயன்படுத்தியே அன்னியர்கள் தங்களுக்குத் தேவையான அடிமைகளை, துரோகிகளை, கங்காணிகளை, கூலிகளை, காலிகளை, போலிகளைத் தமிழினக் கடலில் பிடித்திட்டார்கள். இப்படி அவர்கள் வலை வீசிப் பிடிக்கும் தொழிலின் மூலம் தமிழினத்தையே சிதைத்துச் சீரழித்து தன்மானமும் தன்னம்பிக்கையுமற்ற அடிமைகளாக்கிடும் திட்டத்தை முழுமையாக்கிட்டார்கள். எனவேதான், முதலில் கலையுலகத்தார் அருளுலகத்தார்க்கும் பொருளுலகத்தார்க்கும் தலைமை தாங்குவதை அடியோடு ஒழிக்க வேண்டும். எந்தக் கலைஞனாக இருந்தாலும் அவன் கூலி மனமும், போலி மனமும், காலி மனமும் கொண்டவனாகவே வாழுகிறான் என்ற பேருண்மையையும், அவனை அருளுலகத்தாரால்தான் உண்மையான தன்மானமும், இனப்பற்றும், மொழியுணர்வும், பண்பாட்டுப் பிடிப்பும், நாகரிக நாட்டமும், தன்னம்பிக்கையும், நாட்டுரிமை வெறியும் ... ... உடையவனாகத் திருத்த முடியும்! திருத்த முடியும்! திருத்த முடியும்! எனவே, பொருளுலகுக்கு என்றென்றும் அருளுலகத்தாரே தலைமை தாங்கி வழிகாட்டியாகவும், வழித்துணையாகவும் விளங்கிடல் வேண்டும்! வேண்டும்! வேண்டும்! வேண்டும் என்ற சித்தாந்தத்தை

> ***கலைத்துறையினர் அரசியலுக்கு வந்தாலும் அவர்கள் சித்தர்களின் வழி காட்டுதலில் செயல் பட்டால்தான் நாட்டுக்கு நன்மை விளையும்***

அனைத்து மானுட இனங்களும் உணரச் செய்ய வேண்டும்! உணரச் செய்ய வேண்டும்! உணரச் செய்ய வேண்டும்!

6. அருளுலகத்தார்களில் மிகமிகச் சிலரே போலிகளாக, கூலிகளாக, காலிகளாக இருப்பர். அவர்களும் காலப்போக்கில் திருந்திடுவார்கள். அருளுலகத்தாரில் இனத் துரோகிகளோ, மொழி விரோதிகளோ தோன்றுவது அரிதினும் அரிதாகும். எனவே, அருளுலகத்தாரால்தான் மொழிக்கும் இனத்துக்கும் நாட்டுக்கும் உரிய தொண்டினைப் பெரிய அளவில் ஆற்றிட முடியும்! முடியும்! முடியும்!

7. தமிழக நாள் அங்காடிகளுக்கும், இரவு அங்காடிகளுக்கும், வாரச் சந்தைகளுக்கும் சென்று பார்த்தால் தமிழ்நாடு அன்னியர்களின் ஆட்சியில் மிகமிக நுட்பமாகவும், திட்பமாகவும் சிக்கிக் கொண்டிருப்பது விளங்கும். எனவே, மிகமிக வெளிப்படையாக நேரடியாக அன்னியர்களின் வணிக ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடியேயாக வேண்டும். போராடப் போராடத்தான் அன்னியர்கள் தங்களின் ஆதிக்க வெறிகளையும், சூழ்ச்சிகளையும், தமிழினப் பழிப்பு இழிப்பு அழிப்பு வேலைகளையும் குறைத்துக் கொள்வார்கள். இன்னும் சொல்லப் போனால், அன்னியர்களே தமிழின விழிச்சி, எழிச்சி, செழிச்சிப் பணிகளுக்கு மறைமுகமாகவும், நேரடியாகவும் உதவிடுவார்கள். இல்லாவிட்டால், இனவிழிச்சிப் போர், இன எழிச்சிப் போர், இனச் செழிச்சிப் போர், ... ... தாய்நாட்டிலிருக்கும் அன்னியர்களுடன் நிகழுவதாகத்தான் துவங்கிடும். இப் பேருண்மையினை உடனடியாகத் தமிழர்கள் புரிந்தும், புரிய வைத்தும் செயல்பட்டிட்டால் போதும். இ.ம.இ.யும், அ.வி.தி.யும் மாபெரும் வெற்றிகளைப் பெறும். பண்பாட்டுப் பிடிப்புடைய பைந்தமிழர் அருளாட்சி அமைப்பர்.

> **தமிழகத்தின் அனைத்து வணிகங்களையும் தமிழர்கள் மட்டுமே செய்யும் நிலை வர வேண்டும்.**

8. எழுதப் படிக்கத் தெரியாத மக்களே அதிகமாக இருக்கக் கூடிய நாடு நம்நாடு. அரச குடும்பத்தார்களும், வேளிர்களும், நிலக் கிழார்களும், அன்னியர்களும்; நல்ல உடல்வலிவும், தோற்றப் பொலிவும், சுறுசுறுப்புமுடைய இளைஞர்களை யெல்லாம் தங்களுடைய கூலிகளாக, கங்காணிகளாக, வேலிகளாக, அடிமைகளாக தயாரித்திடுகிறார்கள். எனவே, வாள் வீசத் தெரிந்தவன், வேல் ஓச்சத் தெரிந்தவன், குதிரை யானை ஏறத் தெரிந்தவன், வாய்ச் சொல்லில் வளமாகப் பேசத் தெரிந்தவன், எதையும் துணிவோடு திறமையோடு செய்யக்கூடிய ஆற்றலுடையவன் ... ... என்று நாட்டிலுள்ள அனைவரையுமே தேடிப் பொறுக்கி எடுத்து அன்னியர்கள், தமிழின எதேச்சதிகார சர்வாதிகாரிகள், பணம் படைத்த தன்னல வெறியர்கள், சூழ்ச்சித் திறம் மிக்க சேனைத் தலைவர்கள்... ... முதலியவர்கள் தங்களுக்குரியவர்களாக ஆக்கிக் கொண்டு விடுகிறார்கள். இதேபோல், எழுத்தறிவுடை யவர்களையும், இலக்கிய வளமுடையவர்களையும் தங்களுடைய ஓலைநாயகங்களாக ஆக்கி விடுகிறார்கள். தன்னம்பிக்கையும், தன்மான உணர்வும், இனப்பற்றும், மொழிப்பற்றும், நாட்டுப் பற்றும் மிகுதியாக உடைய கவிஞர்களையெல்லாம் மேலே குறிப்பிட்ட தன்னல வெறியர்களும், பேராசைக் காரர்களும், அன்னியர்களும் பரிசு, நன்கொடை, அன்பளிப்பு என்பனவற்றின் மூலம் விலைக்கு வாங்கித் தங்களது தொழுவத்தில் கட்டிய மாடுகளாக ஆக்கி விடுகிறார்கள். எனவேதான், பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி மதுரையின் அழிவையொட்டி விழித்தெழுந்து மொழியையும், இனத்தையும், நாட்டையும்

> **அன்னியருக்காக உழைக்கும் தமிழர்கள் தமிழ் நாட்டுணர்வோ மொழி யுணர்வோ இல்லாத அடிமைகளாகவே ஆகிடுகிறார்கள்.**

பாதுகாக்கத் தீட்டிய திட்டங்களும், எடுத்த முயற்சிகளும் காட்டாற்று வெள்ளத்தைக் கையால் மணலை அள்ளிப் போட்டுத் தடுக்க முயற்சித்த முயற்சிபோல் ஆகிவிட்டன. எனவே, தமிழின உயர்ச்சிக்காக அமைக்கப் போகும் அருளாட்சியினை கோழைகளாகவும், இனஉணர்வற்றவர்களாகவும், மொழியுணர்வற்றவர்களாகவும், நாட்டுப் பற்றற்றவர்களாகவும், கூலி மனம் படைத்தவர்களாகவும் இருப்பவர்களைத் திருத்தவோ முடிவு கட்டவோ முயற்சிப்பதன் மூலமே அமைக்க முடியும். இதனைப் பெரும்பாலான பொதுமக்களுக்குப் புரிய வைப்பதைப் பொறுத்துத்தான் இந்து மதத்தை மறுமலர்ச்சி அடையச் செய்வதற்காக தமிழின அருட்பேரரசை அமைக்கும் முயற்சி வெற்றி பெறும்! வெற்றி பெறும்! வெற்றி பெறும்! இப் பேருண்மையினைப் புரியாமல் இந்துமத விரோதிகளையும், தமிழின விரோதிகளையும் எதிர்ப்பவர்கள், தமிழினத் துரோகிகளைத் திருத்தவும், ஏட்டறிவில்லாத கூலிக்கார அப்பாவித் தமிழர்களை அருளாட்சிப் படைவீரர்களாக மாற்றவும், கோழைகளாகவும் ஏழைகளாகவும் வாழும் தன்னுணர்வற்ற தமிழர்களை வீறு பெற்று எழச் செய்யவும், நாட்டை இராமன் ஆண்டால் என்ன? இராவணன் ஆண்டால் என்ன? என்று பொறுப்பற்று வாழும் தன்னம்பிக்கை யில்லாத தமிழினப் பெருங்குடி மக்களை இந்துமத வரலாறும், தத்துவமும், சித்தாந்தக் குறிக்கோளும் தெரிந்து புரிந்தவர்களாக்கிடவும் உடனடியாகப் பதினெண்சித்தர்கள் படைப்புக்கள் அனைத்தையும் பதினெண்சித்தர்களின் வரலாற்றோடு இணைத்து வில்லுப் பாட்டுக்களாக, இலாவணிப் பாட்டுக்களாக, இளம் பாட்டுக்களாக, கூத்துப் பாட்டுக்களாக, உடுக்கைப் பாட்டுக்களாக, காவடிச் சிந்துகளாக, தாலாட்டுக்களாக, தெம்மாங்குகளாக, ஒப்பாரிகளாக, பண்டாரப் பாடல்களாக, பாணனின் இசைப் பாடல்களாக பல்வேறு வகையில் வடிவப் படுத்தி வாழ வைத்திடல் வேண்டும்! வாழ வைத்திடல் வேண்டும்! வாழ வைத்திடல் வேண்டும்!



9. தமிழ் நாட்டில் இரவு பகலாக நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைப்பவர்கள் பயிர்த் தொழில் செய்யும் உழவர்களே. இதனால்தான், பதினெண் சித்தர்கள் "ஒரு நாட்டின் குடிமகன் என்ற தகுதி உழவனுக்கே உண்டு" என்ற பொருளில் உழவனைக் குடியானவன் குடியாக உண்மையிலேயே வாழ்ந்து நாட்டை வளப் படுத்துபவன், மக்களுக்கு உணவு உடை உறையுள் வழங்குபவன், உழைப்பால் உரமேறிய உடலால் ஆயுதமேந்திப் பெரும் வீரம் விளைவித்து நாட்டைக் காப்பவன்... ... என்பதே பொருள். ஆனால், இந்தக் குடியானவன் பனி, மழை, காற்று, கடுங்குளிர், கொடும்வெயில்.... முதலியவைகளோடு போராடி விளைவித்துத் தருபவைகளை உள்நாட்டுச் சிறு வியாபாரிகளும், கங்காணிகளும், தரகர்களும் அநியாயக் குறைந்த விலைக்கு வாங்கி வெளிநாட்டு வியாபாரிகளுக்கு விற்றுச் சுரண்டி வாழுகிறார்கள். அந்த வெளிநாட்டு வியாபாரிகளே குறைந்த இலாபத்தையே உள்நாட்டு வியாபாரிகளுக்கும், கங்காணிகளுக்கும் வழங்கி விட்டு வாங்கிய உணவுப் பொருள்களைக் கொள்ளை இலாபத்திற்கு அலைகடல் கடந்த நாடுகளுக்கும், மலை கடந்த நாடுகளுக்கும் அனுப்பிச் சம்பாதிக்கின்றார்கள். அங்காடி வணிகர்கள் உழைக்காமல் இப்படி விவசாயிகளின் உழைப்பை உறிஞ்சி வாழ்வதை அடிப்படையாகக் கொண்டுதான் உழவர்களைத் தட்டி எழுப்ப வேண்டும். குடியானவன் கொதித்தெழுந்து கொள்ளை இலாப அன்னியர்களைக் கொன்று குவித்தால் அருளாட்சிக்குரிய முடியாட்சி அமைந்திடும். என்றைக்குப் பொருளை

**விவசாயிகளின் முக்கியத்துவமும் அவர்களை வியாபாரிகளிடமிருந்து காக்க வேண்டிய அவசியமும்**

உற்பத்தி செய்பவர்களை ஏமாற்றும் வியாபாரிகள் ஒழிகிறார்களோ அன்றைக்குத்தான் அருளாட்சி அமைந்திடும்.

10. கோட்டை கொத்தளங்கள் மக்களைப் பிறருக்கு அடிமையாகாமல் காப்பாற்றும் மறச் சாதனங்களே. இருப்பினும் இவை கூட வலிமையான அன்னியரின் படை யெடுப்பால் தகர்க்கப் பட்டு மக்கள் அடிமைப் படுத்தப் படுவதையே வரலாறு காட்டுகின்றது. ஆனால், ஆலயங்களும் கோயில்களுமே மக்களின் அக வாழ்விலும், புற வாழ்விலும் அன்னியர்களை அடிமைப்படுத்த முடியாத அரண்களாக விளங்குகின்றன. இதனை அறியாமல் கோயில் பெருச்சாளிகளும், ஆலயக் கொள்ளைக்காரர்களும் இந்துமதத்தையே சிதைத்துச் சீரழித்து நம்பிக்கையற்ற பயனற்ற நிலைகளை வழிபாட்டு நிலையங்களுக்கும், வழிபாடுகளுக்கும் உருவாக்குகிறார்கள். எனவே, மக்களை அடிமை வாழ்விலிருந்து தடுக்கும் அரண்களாக ஆலயங்களையும், கோயில்களையும் வளமான நிறுவனங்களாலும், வலிமையான நிர்வாகங்களாலும் செம்மையான செழுமையான இயக்கத்தைப் பெறுமாறு செய்ய வேண்டும். இதற்காக அருளாட்சி சர்வாதிகாரிகள் தோற்றுவிக்கப் பட்டேயாக வேண்டும்.



11. நாடாளும் தலைவர்கள் தங்களை யறியாமல் கலைஞர்களோடு கலந்து முறையற்ற இன்பங்களை நிறைய துய்த்துக் கூத்தடித்ததால்தான் நெறியற்ற அறிவாற்றலற்ற கூலிகளாக, எதையும் செய்யும் போலிகளான கலைஞர்களே தலைவர்களாகி விட்டார்கள். இவர்களே நாட்டை அன்னியர்கள் சூழ்ச்சியால் பிரித்துச் சுரண்டி ஏமாற்றி வாழ்வதற்கு வழிவகைகளைச் செய்கின்றார்கள். எள்முனையளவு கூட மொழிப்பற்றோ, இனப்பற்றோ, நாட்டுப் பற்றோ, பண்பாட்டுப் பிடிப்போ ... ... இல்லாத கலைஞர்களே அரசியல் சதுரங்கம் ஆடுகிறார்கள். இவர்கள் தங்களுக்குக் கிடைக்கும் கூலிக்கும், பரிசுக்கும், புகழுக்கும் ஏற்ப நாட்டை அன்னியருக்குக் காட்டிக் கொடுத்தும், கூட்டிக் கொடுத்தும் செயல்படுகின்றார்கள். இமயமலை பிராகிருத மொழிக் களப்பிறர்களும், கங்கைக்கரைப் பாலிமொழிக் களப்பிறர்களும், தேவநாகரி மோரியர்களும், சமசுகிருத வடஆரியர்களும், சோனகர்களும், யவனர்களும், சீனர்களும்... ... ... தமிழகம் என்றுமே தன்னுரிமை பெற முடியாதபடி குட்டிக் குட்டிச் சிற்றரசுகளையும், வேளிர் கோட்டைகளையும், நிலக்கிழார் பாளையக் கோட்டங்களையும், காட்டரசின் அரண்களையும் ... ... ... நிலைத்த வடிவம் பெறச் செய்திட்டனர். இவற்றிற்கு மேலாக வேதமதம், சமணம், புத்தம், சைவம், வைணவம்... ... என்ற மதச் சண்டைகளையும், எண்ணற்ற சாதி வேறுபாடுகளையும், உயர்வு தாழ்வுகளையும், சாதிச் சண்டைச் சச்சரவுகளையும் நன்கு வளர்த்திட்டார்கள் இந்த அன்னியர்கள். இந்த அன்னியர்களிடம் கூலியும், பரிசும், புகழும் பெறுவதோடு அப்பாவி மக்களிடம் அன்பளிப்புகளும், தண்டல்களும், வசூல்களும் பெற்று வெறி நிறைந்த இன்ப வாழ்வு வாழும் கலைஞர்களே இந்த நாட்டின் ஒற்றுமையைக் குலைக்கவும், தன்மானத்தைத் தகர்க்கவும், தன்னம்பிக்கையை நலிவடையச் செய்யவும் ... ... செய்கின்றார்கள். இவர்களை அன்னியர்களே புகழுக்குரிய சமுதாயத் தலைவர்களாக ஆக்குகிறார்கள். அப்பாவி மக்களும் ஏற்கிறார்கள். இப்படிப்பட்ட கலை மயக்கமும், வெறியும், முறைகேடும், குறையும் மிகுந்த சூழலில் இந்துமதத் தத்துவமும் வரலாறும் வாழ்வியலும் கூறி அருளாட்சிப் பணியை வளர்ப்பதைத் தவிர வேறு வழியில்லை.



12. இந்துமதம் துறவறத்தைக் கூறவில்லை. அச்சமும் கூச்சமும் நிறைந்த பூசைமுறைகளைக் கூறவில்லை. இனிய இல்லற வாழ்வின் இச்சைகளை நிறைவேற்றி வாழும் இயல்பான இதமான இன்பமான இணக்கமான ... ... பூசைமுறைகளைத்தான் கூறுகிறது. மனிதர்களைக் கடவுளாக்கும் மறைகளும், முறைகளும், நெறிகளும், வேதங்களும், சித்தாந்தங்களும் உடையதுதான் இந்துமதம்... ... என்ற பேருண்மைகளை அநுபவப் பூர்வமாக அருட்பணி விரிவாக்கத் திட்டங்களால் விளக்கித்தான் அருளாட்சி அமைப்புப் பணியை வளர்க்க வேண்டும்! வள வலிவு பெறச் செய்ய வேண்டும்!
13. நாட்டு நடப்பில் அன்னியரின் ஆதிக்கம் அதிகமாகி யிருப்பதால் வீட்டிலும், தனிமனித உணர்விலும் அடிமை முறை, பேராசை, தன்னம்பிக்கையின்மை, கூலிமனம், போலிச் செயல்... ... முதலியவை மிகுந்து விட்டன. இதற்காக அன்னியர்களை எதிர்த்துப் பல போர்களை உருவாக்கியே தீர வேண்டும். பாரதப் போரில்தான் நீதி நிலைநாட்டப் பட்டது என்பது போல் பைந்தமிழகம் பல போர்களின் வெற்றிக்குப் பிறகுதான் தன்னம்பிக்கையையும், தன்மானத்தையும், இன ஒற்றுமையையும், மொழிப்பற்றையும், பண்பாட்டுப் பிடிப்பையும் பெற்றிடும். அதற்கு இந்துமத மறுமலர்ச்சிப் பணிகளை, அருட்பணி விரிவாக்கத் திட்டங்களால் செயலாக்குவதுதான் வழி! விழி! செழி! வழிபாட்டு நிலையங்கள் கட்டப்படாத வெட்டவெளிகளாக செடிகொடிகள் படர்ந்த இடமாக, மரத்தடிகளாக, மரமலர்ச் சோலைகளாக, மாட கூட கோபுரங்கள் மிகுந்ததாக... ... எப்படி இருந்தாலும் சரி, அதனைக் கலைகள் பயிலும் குருகுலங்களாகப் பயன்படுத்திடல் வேண்டும். அப்பொழுதுதான், தனிமனித நிறைவு, குடும்ப ஒற்றுமை, இனப்பற்று, மொழிப்பற்று, நாட்டுப்பற்று, பண்பாட்டுப் பிடிப்பு, வரலாற்றுப் பெருமிதம், இலக்கியப் பீடு, நாகரீக உரிமையுணர்வு, தன்னம்பிக்கை, தன்மானம், இனமானம், ... ... முதலிய அனைத்து உணர்வுகளும், எண்ணங்களும், கருத்துக்களும், சிந்தனைகளும் ஊற்றெடுக்கும்! ஊற்றெடுக்கும்! ஊற்றெடுக்கும்!

> **நாட்டில் அடிமைத்தனம் பெருகியதால் வீட்டிலும் நிம்மதி யின்மை, போலி வாழ்க்கை... பெருகியது.**

14. இளம் பெண்களும், சிறுவர்களும், காலை மாலை வழிபாட்டு நிலையங்களுக்குச் செல்லுதல் வேண்டும். இல்லத்தரசிகள் உணவு சமைத்தும், தங்கள் தங்களின் இல்லங்களிலேயே சமைத்ததைப் படையலிட வேண்டும். அல்லது வழிபாட்டு நிலையங்களுக்குக் கொணர்ந்து, உரும வேளை உணவைப் படையலாக்க வேண்டும். வாரம் ஒருமுறையாவது, ஒவ்வொரு இல்லத்தாரும் வழிபாட்டு நிலையத்தில் படையல் இட்டுப் பலரோடும் பகிர்ந்துண்ண வேண்டும். குருதிப் பலியும், இறைச்சிப் படையலுமே அருவ அருவுருவ அருளுலகத்தாருடன் நெருக்கமான தொடர்பை வளர்க்கும். மூத்த ஆடவரும், பெண்டிரும் உரும வேளையில் வழிபாட்டு நிலையங்களில் மோனத்தில் தவத்தில் பத்தியில் ஞானத்தில் ஈடுபட வேண்டும். இளைஞர்கள் இரவுக் காலத்தில் உணவுண்ட பிறகே கூடி வழிபாடு செய்தல், உடற்பயிற்சிகள் செய்தல், போர்க்கலைகள் பயிலுதல், குருவிடம் பாடம் கேட்டல், ... ... முதலியனவற்றை செய்தல் வேண்டும். இப்படி வழிபாட்டு நிலையங்களைப் பயன்படுத்தினுல்தான், அன்னியர்களால் அகவாழ்விலோ, புறவாழ்விலோ அடிமைப் படுத்தப் படாத நிலை உருவாகிடும். அதாவது வழிபாட்டு நிலையங்களே தாயக

> **தமிழகத்துக் கோயில்கள் செயல்பட வேண்டிய முறையும் மக்கள் பயன் படுத்திட வேண்டிய விதமும்**

உரிமையையும், பெருமையையும் தன்மானத் தன்னம்பிக்கைகளையும் வீரத்தோடு வளர்க்கும் கருவறைகள் என்ற பதினெண்சித்தர்களின் தத்துவம் செயலாக்கப் படல் வேண்டும். வழிபாட்டு நிலையங்களில் முதியவர்கள் புராண இதிகாச இலக்கியங்களைப் பாடம் கேட்பதும், இளைஞர்கள் வீர விளையாட்டுக்களையும், போர்க்கலைகளையும், உடற்பயிற்சிகளையும் செய்வதும் நிகழுதல் வேண்டும். பகற்காலங்களில் இலக்கியம், மருத்துவம், ஓவியம், சிற்பம், நிமித்திகம், பூசாவிதி, ... ... முதலியவைகளைக் கற்றுக்



கொள்வதும் தொடர்ந்து நிகழுதல் வேண்டும். இவை நிகழாவிட்டால் வீடு நலிந்து நாடும் நலிந்திடும். வழிபாட்டு நிலையங்களில் உள்ள (48) நாற்பத்தெட்டு வகை ஊழியக்காரர்களையும் ஊர்மக்கள் தங்களின் விழிகளாகப் பாதுகாக்க வேண்டும். இந்த நாற்பத்தெட்டுப் பேர்களும் உண்டி, உடை, உறையுள் முதலியவைகளுக்கு ஏங்காமலும், தேங்காமலும், தூங்காமலும் பாதுகாக்க வேண்டும். அப்பொழுதுதான் வழிபாட்டு நிலையங்கள் தூய்மையாகவும், பஞ்சவடிகள் செழிப்பாகவும், கருவறை மரங்கள் வளமாகவும், ஆறுகாலப் பூசைகள் முறையாகவும்... ... நிகழ்ந்து அருள் நிறைய ஊற்றெடுத்துக் கொண்டே இருக்கும். ஆறுகாலத் தொழுகையால் அந்தந்த ஊரார் குறைகளைக் களைந்திடும். அருட்சத்திகள் மருந்தாகவும், விருந்தாகவும் கிடைத்திடும். இதனைப் புரியாமல் வழிபாட்டு நிலைய ஊழியர்கள் யாராவது சிலர் தவறு செய்வதைப் பெரிதுபடுத்தி வழிபாட்டு நிலையங்களையும் இயக்கங்களையும் நிறுவன நிர்வாக ஒழுங்கமைப்புக்களையும் சிறுமைப் படுத்திச் சிதைத்துக் கண்கானிப்பும் கவனமும் இன்றிச் செய்துவிடக் கூடாது! கூடாது! கூடாது! தனிமனிதத் தவறுகளுக்குத் தத்துவம் பொறுப்பாக முடியாது. பயிரினங்களில் கசப்பும் நஞ்சும் உடையவை போல், உயிரினங்களில் கொடுமையும் நச்சுத் தன்மையும் பிறப்பெடுப்பது போல் மனிதர்களில் தவறு செய்பவர்கள், தீங்கு செய்பவர்கள், மக்கள் நலத் துரோகமும், விரோதமும் செய்பவர்கள் இருக்கத்தான் செய்வார்கள். இவர்களை யெல்லாம் அடக்கி ஒடுக்கித் திருத்தி நல்வழிப் படுத்திச் சமுதாயத்தைக் கட்டுக் கோப்பாகக் காப்பாற்றத் துணைச் சத்தியாக, சாதனமாக, வழிபாட்டுத் தத்துவங்களையும், நிலையங்களையும், இயக்கங்களையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். வழிபாட்டு நிலையங்களே மனித வாழ்வின் வழி, வழிகாட்டி, வழித்துணை, வாழ்க்கைப் பாதுகாப்பு அரண். அன்னியர்கள் இந்த வழிபாட்டு நிலையங்களை இழித்தும், பழித்தும், நலிவடையச் செய்யும் செயல்பட்டே இந்துமதத்தைச் செயலற்றதாகச் செய்தனர். அதனால், தமிழ் மொழியும், இனமும், நாடும் வலுவிழந்து, வாழ்விழந்து, பெருமையும் வலிமையும் இன்றி அடிமைப்பட்டு மிடிமையுற்று விட்டது.

15. படையல் பொருள்கள் அனைத்தும் வழிபாட்டு நிலையங்களில் தங்கியிருக்கும் மாணாக்கர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட்டது போக மிஞ்சும் போதே நாற்பத்தெட்டு வகை ஊழியக்காரர்களுக்கும் வழங்கப் படுகின்றன. ஏனெனில், ஊழியக் காரர்களுக்கு இறையிலி நிலங்களும், ஊர் விளைச்சலில் காணிக்கு இவ்வளவு காணிக்கை என்று வழங்கும் கணக்கும் பதினெண் சித்தர்களால் படைக்கப் பட்டிருக்கின்றன. தனிமனிதர் சிறப்பாகச் செய்யும் பூசைப் படையலும், விழாக்கால பூசைப் படையல்களுமே உடனுக்குடன் பூசையில் பங்கு பெறுபவர்களுக்கு வழங்கும் மரபை வகுத்தனர் பதினெண்சித்தர்கள். ஊர்ப் பெண்டிர்கள் மலர்ச்சரங்களையும் மாலைகளையும் வழிபாட்டுநிலையக் கருவறை மூலவர்களுக்கு அணிவித்து அருளேற்றப் பெற்றுத் தங்களின் கூந்தலில் சூடிக் கொள்வதன் மூலம் தேவ நிலைகளை, தெய்வ நிலைகளைப் படிப்படியாகப் பெறுகின்றார்கள். அனைத்து விதமான அருவ அருவுருவப் பாதிப்புக்களிலிருந்தும் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளுகின்றார்கள்.

16. **<u>மொழியே மனித இனவழி</u>:**

பதினெண்சித்தர்கள் தங்களுடைய தாய்மொழியான அண்ட பேரண்டமாளும் அருளூறு அமுத மொழியான தமிழ் மொழியிலேயே மண்ணின் ஈசர்களான **'மணீசர்'**களைப் பதப்படுத்தி மனவழி செயல்படும் இதமான **'மனிதர்'**களாக மாற்றிடும் இந்துமதத்தை வழங்கினார்கள். எனவே, இந்த மொழியின் மூலம் விரைந்தும் விரிந்தும் அண்ட பேரண்ட அளவில் சத்திகளையும், சித்திகளையும், முத்திகளையும் பெற்றிட முடியும்; ஆனால், இம் மண்ணுலகில் வெப்பத் தட்பங்களுக்கும், இயற்கைச் சூழல்களுக்கும் ஏற்ப மனித உடல் அளவுகளும்; தன்மைகளும், வண்ணங்களும், .... பல்வேறு வகைகளை பெற்றிருப்பதால், தமிழ் மொழியை அடிப்படையாகக் கொண்டே தேவைகளுக்கு ஏற்பப் பல நூற்றுக்கணக்கில் மொழிகளை உண்டாக்கினார்கள். இம்மொழிகள் ஒன்றுக்கொன்று கூடிக் குலவி உறவு பூண்டு, புதியபுதிய மொழிகளை ஈன்றெடுக்கக் கூடிய உயிர்த் தன்மைகளையும், ஆண்மைகளையும் வழங்கினார்கள். எனவே, மொழிவெறியோ, மொழிஆதிக்கமோ, மொழியடிமையோ, மொழிச் சர்வாதிகாரமோ, ... ... தோன்றாமல் அவரவர் அவருடைய தாய்மொழியிலேயே பூசைகளைச் செய்ய வேண்டும். அதுதான், அந்த அந்த வட்டார உருவ, அருவ, அருவுருவ அருளாளர்களின் தொடர்பை விளைத்துத் தேவையான சத்தி சித்தி முத்திகளை வழங்கிடும். இதனைப் புரியாமல் அருளாளர்கள் தோன்றிய தாய்மொழியை வலியுறுத்தி மதங்களைப் பரப்பத் தேவையில்லை. இம் மண்ணுலகில் பதினெண் சித்தர்களின் விந்துவழி வாரிசுகளைத் தவிர வேறு யாரும் மூலக் கருவறைகளைத் தோற்றுவித்ததில்லை. அதாவது, பதினெண் சித்தர் பீடாதிபதிகள் காலங்கள் தோறும் புதுப்பித்தும், தோற்றுவித்தும் வருகின்ற வழிபாட்டு நிலையங்களே அருளூற்றுக்களாக உள்ளன. எனவே, துணிந்து தமிழர்கள் இம்மண்ணுலகில் உள்ள அனைத்து மத மூல வழிபாட்டுக் கருவறைகளிலும், தமிழ் மொழியில் ஏந்தரீக, தாந்தரீக, மாந்தரீகச் சக்கரங்களும் சுருதி, ஆரண, ஆகம, மீமாம்சை இயக்கங்களும், நேம, நியம, நிடத நிட்டையின் நிறுவனங்களும், சாத்திர தோத்திர அத்திர நேத்திர நிர்வாகங்களுமே அருளாட்சி செய்கின்றன என்ற பேருண்மையைத் தெரியலாம், புரியலாம், அறியலாம், உணரலாம், பயன்படுத்தலாம்.

> ***மொழியின் முக்கியத்துவம்,***
> ***தாய்மொழியின் பயன்பாடு,***
> ***தமிழ்மொழியின் தாய்மைநிலை***

17. பதினெண்சித்தர்கள் விலங்குகளோடு விலங்காக வாழ்ந்த மணீசர்களைப் பதப்படுத்தி மனிதர்களாக்கிடப் பயன்படுத்திய அமுதமே தமிழ்மொழி. நோயுறாமல் மனித வாழ்வையும், சமூகக் கட்டமைப்புக்களையும், ஆட்சி முறைகளையும் காத்திடும் விருந்தாகவும், மருந்தாகவும் படைக்கப் பட்டதே இந்துமதம். அதாவது, இந்துமதம் எனும் மெய்ஞ்ஞானம் ஒரு சமூக விஞ்ஞானமே. இந்த விஞ்ஞானமெனும் பேராற்றின் கிளை ஆறுகளாகவோ, வாய்க்கால்களாக, சிறிய கால்வாய்களாக, ஓடைகளாகத் தோன்றுவனதான் உலக மதங்களும், சமய சமுதாய அரசியல் சித்தாந்தங்களும், தத்துவங்களும். எனவே, எந்த மதமும், சித்தாந்தமும், தத்துவமும், சித்தர் நெறி என்கின்ற இந்து மதத்துக்கு வேறானவையல்ல! மாறானவையல்ல! எதிரானவையல்ல! பகையானவையல்ல!

**மூல நகல் 20-06-1985 அன்று எழுதப்பட்ட கையெழுத்துப் பிறதியாக உள்ளது.**



## குருதேவரின் அருட்பட்டங்கள்

பத்தி ஆழி, சத்தி ஆழி, சித்தி ஆழி, முத்தி ஆழி,
அமரத் தரு, இறைமைத் தரு, இருடித் தரு, தெய்வீகத் தரு,
தவத் திரு, மறைத் திரு, மந்திறத் திரு, வேள்வித் திரு,
தாந்தரீக மூர்த்தி, ஞான மூர்த்தி, மந்தர மூர்த்தி, வேத மூர்த்தி,
நான்மறை வித்து, நான்முறை வித்து, நானெறி வித்து, நான்வேத வித்து,
ஆத்தாள் அமளிகை, கொற்றவை இருக்கை, பராசத்தி திருவடி,
மகமீனுடையார், மிதுன இலக்கணமுடையார், சிம்மராசியுடையார்,
எட்டாம் பிறப்புடையார், நல்லிலக்கண மார்புடையார்,
அங்கவியல் இலக்கண நிறைவுடையார், நஞ்சுண்ட மேனியார்,
நூற்றெட்டுத் திருப்பதிச் சக்கரங்கள் கொண்டார்,
இருநூற்று நாற்பத்து மூன்று சத்திபீடச் சக்கரங்கள் அடைந்தார்,
ஆயிரத்தெட்டுச் சிவாலயச் சக்கரங்கள் உறைந்தார்,
குருநிலை பதினெட்டுடையார், திருவோலக்க நிலை முப்பதுடையார்,
தேவகுரு, வேதகுரு, ஓதகுரு, குருதேவர்,
நாதகுரு, போதகுரு, வாதகுரு, மோதகுரு,
சுரகுரு, அசுரகுரு, அமரகுரு, வானகுரு,
யாககுரு, யோககுரு, போககுரு, மோககுரு,
கணகுரு, முனிகுரு, இருடிகுரு, அருவுருவ குரு,
ஞாலகுரு, ஞானகுரு, சித்தகுரு, சகடகுரு,
கருவோலக்க நாயகம், திருவோலக்க நாயகம்,
குருவோலக்க நாயகம், தருவோலக்க நாயகம்,
அருளோலக்க நாயகம், மருளோலக்க நாயகம்,
நாளோலக்க நாயகம், அருட்கொடை வள்ளல்,
பேரருள் வள்ளல், ஞான வள்ளல்,
ஞானபீடம், ஞானவேந்து, ஞானத்தந்தை,
கருகுல ஆதீனம், குருகுல ஆதீனம்,
தருகுல ஆதீனம், திருகுல ஆதீனம்,
திருமூல ஆதீனம், கருமூலப் பண்டாரம்,
அனாதியாதி கடந்த தம்பிரான்,
ஐந்தர நாயகம், ஐந்திர நாயகம், ஐந்திற நாயகம்,
ஐந்தீ வேட்டல் நாயகம், முத்தீ ஓம்பல் நாயகம்,
மந்தரபீடம், மந்திரபீடம், மந்திறபீடம், மாந்தரபீடம், மாந்தரீகப்பீடம்,
தந்தரபீடம், தந்திரபீடம், தந்திறபீடம், தாந்தரபீடம், தாந்தரீகப்பீடம்,
எந்தரபீடம், எந்திரபீடம், எந்திறபீடம், ஏந்தரபீடம், ஏந்தரீகப்பீடம்,
குண்டலிப்பீடம், குவலய குருபீடம்,
உலகமத ஆய்வாளர், உலகக் கபாலிக மதகுரு,
பரப்பிறம்மம், எல்லாம் வல்ல சித்தர்,
நிறையக்ஞர், கருவறை மூலவர்களின் அம்மையப்பர்,
அருளாட்சி நாயகம், நான்குயுக நாயகம், தத்துவ நாயகம்,
அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம்,
இந்துமதத் தந்தை, இந்துவேத நாயகம்,
அந்தணர் அண்ணல், ஞானுச்சாரியார்,
இந்துமத ஆச்சாறியார், இராசிவட்ட நிறைவுடையார்,
பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி,
குருமகா சன்னிதானம், குருதேவர்,

**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்**

.... . ...... .......

7. நண்ப! யாம்தான் முதலாளிகளால் விலைக்கு வாங்கப் பட்டுவிடாத அருளாளராகத் தொடர்ந்து வாழுகிறோம். எம்மிடம்தான் சாதி, மத, இன, மொழி வேறுபாட்டுணர்வே இல்லை. யாம்தான், ஏழைகளுக்கும், பாட்டாளிகளுக்கும், படிப்பில்லாப் பாமரர்களுக்கும் உரிய வழியாக, வழித்துணையாக, வழிப்பயனாக......... வாழுகிறோம். உலக மானுட நல மேம்பாட்டுப் பணிக்கே மாபெரும் இழப்பு ஏற்படும் வண்ணம் எம்மை எம்காலத்தவர் பயன்படுத்தாமல் போய்விடக் கூடாது! இது எச்சரிக்கை வேண்டுகோள்; அறிவின் புலம்பல்!

அன்பு
ஞாலகுரு சித்தர் கருவூரர்

*(குருதேவர் 03-10-1983இல் சித்தரடியானுக்கு எழுதிய 'செயல்நிலை விளக்கத் திருவோலையும் குருநிலை விளக்கக் குறிப்பும்' என்ற தலைப்பிட்ட அஞ்சலின் ஒரு பத்தி)*

---

... ... ... ... ...

5. வீட்டுக்கோர் ஆள், எல்லோரும் இயன்ற பொருளுதவி.... என்று நமக்கு ஆதரவு பெருகிடச் சொற்பொழிவுகளும், அச்சிட்டவைகளும் பெருகிட வேண்டும். ... ... ... ... ... . உண்மையான இந்து மதமே! இந்தியப் பண்பாடு, இந்தியர்கள், இந்துக்கள் என்ற சொற்களின் அடிப்படை. அனைத்து மொழியினரும் விடுதலை பெற்ற கூட்டாட்சி இந்தியாவில் அமைய அனைத்து மொழிகளையும் கெடுக்கும் வடஆரியரும், பிருமணரும் ஒரு முடிவுக்கு வந்து தனித்தன்மை அழிந்து அனைத்தோடும் கலக்க வேண்டும். இல்லையேல், பீடாதிபதிகளின் வாக்குகள் செயலாகிச் சாம்பலாக்கப்படுவர்; இந்திய ஒற்றுமை இந்து மதத்தால்தான் நிலைக்கும். இந்தியாவை இ.ம.இ.தான் காக்க முடியும். அருளாட்சிக்காக ஓயாது பேசுங்கள்! எழுதுங்கள்! பூசை செய்யுங்கள். <u>மிகப் பெரிய முழுமை மாற்றப் புரட்சி எளிதல்ல! அதுவும் அருட்புரட்சி அன்புவழியில்</u> உணர்க! உணர்த்துக! செய்யும் பணியைச் சிறப்பாகச் செய்க.
<u>குருவாணை</u>

சித்தர் கருவூரர்
7/3/85

*(குருதேவர் சித்தரடியானுக்கு எழுதிய 'அருளாட்சிக்காகத் தீரத் தியாகத் திட்ட விளக்க மடல்' என்ற தலைப்பிட்ட அஞ்சலின் ஒரு பத்தி.)*

BOOK-POST

To

*<u>If undelivered please return to:</u>*
**Forum of Siddharadiyaans**
C/o Mr. V.Muniraju
Door No.345, Bellandur Post
Outer Ring Road,
**Bangalore East 560103**
**Cell:** 09972130609